தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 125

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: ஐப்பசி 22உ சனி (7—11—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி 23உ ஞாயிறு (8—11—53)

திராவிட நாடு கோரிக்கை வேகத்தைக் குறைக்க அற்புத யோசனை!

"இந்தியாவின் பிரதேச நிர்வாகத்தில், இந்திய சர்க்கார் தந்தி—தபால் சர்வீசில் வேலை செய்யும் மாதர்கள் சேரலாம்."

துக்ளக் போக்கை மேற்கொள்ள யூனியன் சர்க்காருக்கு வேண்டுகோள்

தெற்கு, வடக்கு உறவை நெருக்கமாக்க இரண்டாவது தலைநகரம் தேவைப்படுகிறதாம்!

பாராளுமன்றத் துணைத் தலைவர் எம். அனந்தசயனம் உறக்கம் தெளிந்தார்!

கர்னூல், நவ. 5—

"தெற்கிற்கும் வடக்கிற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவதற்காக, யூனியன் சர்க்காரின் துணைத் தலைநகரம் ஐதராபாத்தில் இருக்க வேண்டும்,"

—என்ற யோசனையை, எம். அனந்தசயனம் அய்யங்கார் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

"விசால ஆந்திரத்தின் தலைநகர் ஐதராபாத் என்பதற்கு விரோதமில்லாத வகையில், இந்திய சர்க்காரின் துணைத் தலைநகராக, அது இருக்கவேண்டும்."

"தனித்த திராவிட நாடு என்ற பிளவுபடுத்தும் பேச்சு ஆக்கமுறுவதைத் தடுக்க, நாட்டின் தெற்குப் பகுதிக்கும் வடக்குப் பகுதிக்கும் நெருங்கியத் தொடர்புண்டாக்கும் வாய்ப்புகளைப் பெருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்."

"எடுத்துக்காட்டாக, யூனியன் அமைச்சர்கள் எங்கு காலங்கழிக்க விரும்புகிறார்களோ, அதற்காக, தென் இந்தியாவில் வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். முன்னர் சென்னை சர்க்கார் செய்து வந்ததுபோல, குளிர்மிகுந்த இடமான நீலமலையையோ, அல்லது பங்களூரையோ, தேர்ந்தெடுத்து, யூனியன் அமைச்சர்கள் தங்கள் அலுவலகப் பரிவாரங்களுடன் கோடையை அங்கு கழிக்க ஏற்பாடு செய்துகொள்ளலாம்,"

முஸ்லிம் மன்னனான முகமத் பின் துக்ளக், தனது தலைநகரை டெல்லியில் இருந்து மத்திய இந்தியாவிற்கு மாற்றி, அங்கிருந்து மீண்டும் டெல்லிக்கே மாற்றிய புதுமையை இந்திய வரலாறு எடுத்துக் காட்டுகிறது. அனந்தசயனம் அய்யங்காரும், அந்தத் துக்ளக்கின் அறிவியல் ஊற்றில் இருந்து கடன் பெற்று, திராவிட நாடு கோரிக்கையின் தீவிரத்தைத் தணிக்கக் கிளம்பி இருக்கிறார். துக்ளக்கின் முயற்சியின் முடிவை வரலாறு விளக்கிக் கொண்டு இருக்கிறது. அந்த போதனையை மட்டும் படிக்க அனந்தசயனம் மறந்து விட்டார்போலும்! அவர்தான் எப்பொழுதும் ஆனந்தசயனத்தில் இருப்பவர் ஆயிற்றே?

படித்தோருக்கு வேலை தர இந்திய சர்க்கார் திட்டம்

விரைவில் அமுல் நடத்த சென்னை சர்க்கார் ஏற்பாடு

சென்னை, நவ. 6—

நாட்டில் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இந்திய அரசாங்கம் வகுத்துள்ள திட்டத்தை அமுல் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை சென்னை அரசாங்கம் மேற்கொள்ளத் துவங்கியுள்ளது.

அந்தந்த வட்டாரத்திலுள்ள கல்வி நிலையங்கள், சூழ்நிலைகள் பற்றி செய்து சேகரித்தனுப்பும்படி, சர்க்கார், மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்குக் கட்டளை அனுப்பியுள்ளது.

1953—54-ல் 30,000 புதிய ஆசிரியர்களை நியமிக்க இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மறந்துவிடாதீர்கள்!

தூத்துக்குடி சதி வழக்கில்

96 தோழர்கள் சிக்கியுள்ளனர்; அவர்கள்மீது 16 கடும் சட்டப் பிரிவுகள் வீசப்பட்டுள்ளன

★

எதிர் வழக்காட

நமது பக்கம் 7 வழக்கறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்

★

கழகத் தோழர்களை விடுவிக்க, பயங்கரக் குற்றச்சாட்டுகளை உடைத்தெறிய, கழகத்தின் கண்ணியத்தைக் காப்பாற்ற,

நிதி தாருங்கள்!

நீதி காண உதவுங்கள்!!

★

நீங்கள் தரும் உதவியைப் பொறுத்திருக்கிறது, நாம் அடையும் வெற்றியின் அளவு!

★

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.,
பொறுப்பாளர், தி. மு. தலைமை நிலையம், சென்னை.

கீழ்க்கண்ட முகவரிக்கு நிதி அனுப்புக:—
அ. பொன்னம்பலனார், "அறிவகம்," இராயபுரம், சென்னை-13.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நெசவாளர்களுக்குப் பரிவு காட்டும் சி. ஆர். முகத்திரை விலக்கப்படுகிறது

ஆச்சாரியார் 'அக்கரை' வெறும் பகட்டு என்று ஏ. கிருஷ்ணசாமி அறைகூவல்

கைத்தறியாளர் துயர் களைய நிலையான பரிகாரம்

மதுரை, நவ. 6—

"....ஏற்கனவே 40 சதவிகிதம் வேட்டி, சேலை உற்பத்தியை ஒதுக்கியது, கைத்தறி நெசவாளருக்குக் கொஞ்சங்கூட உதவவில்லை யென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 7 மாதங்களுக்குமுன் கைத்தறித் தொழிலில் எவ்வளவு வீழ்ச்சியிருந்ததோ அதற்கும் அதிகமான வீழ்ச்சி இப்போது இருக்கிறது."

"பிரிட்டனில், 18-ம் நூற்றாண்டிலும், 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்த ஆடை உற்பத்தியாளர் முறை (குலோத்தியர் சிஸ்டம்) போன்று ஒன்று இருந்தால், கைத்தறித் தொழிலுக்கு ஓரளவு உள்நாட்டு மார்க்கெட்டில் பாதுகாப்புக் கிடைக்கும். அவர்கள் சமூகத்துக்கும், கணிசமான ஊழியம் கிடைக்கும். முதல் அமைச்சரின் வழி முறைகளுக்கும் நாம் ஒரு முழுக்குப் போட்டுவிடலாம்."

"ஆலைகள் தங்களுடைய நூல் உற்பத்தியில் 10 சதம் அல்லது 20 சதத்தை நெசவாளர்களுக்கு அளிக்க வேண்டுமென்றும், அவர்கள் உற்பத்தி செய்த ஆடைகளைப் பணங் கொடுத்து வாங்கி விற்கும் பொறுப்பை ஏற்க வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்பட வேண்டும். இவ்வித சூழ்நிலையில் கைத்தறிகளுக்கு உள்நாட்டு மார்க்கெட் கிடைத்தால், அது வெற்றியாக நடக்கும் பொறுப்பு ஆலைகளுக்கு ஏற்பட்டுவிடும். கைத்தறித் தொழிலும் சரியான முறையில் அமைக்கப்படும். பொதுமக்களுக்கும் புது வகைக் கைத்தறித் துணிகள் கிடைக்கும். ஏனெனில், கைத்தறித் துணிகளின் மாதிரிகளை அழகாகத் தயாரிப்பதையும், மக்களுடைய விருப்பம் என்னவென்பதை அறிவதையும், ஆலைகள் தங்களுடைய பொறுப்பாக ஏற்கும்."

"கைத்தறி நெசவாளருக்கு, பொருளாதார, விஞ்ஞான முறையல்லாத, போலியான உதவிகள் அளிப்பது, அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எளிதாகத் தோன்றலாம். ஆனால், இதனால் கைத்தறி நெசவாளர்களுக்கு அனுகூலமில்லை; பொதுமக்களுக்கும் பயன் இல்லை. அதுமட்டுமல்ல; ஆலைத் தொழிலில் வேலை செய்யும் தொழிலாளருக்கும் நன்மை கிடையாது."

—இவ்வாறு, பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், "பழைமை கழிந்து புதியன புகுதல்—குறிப்பாகக் கைத்தறித் தொழிலில்" என்ற பொருள்பற்றி, மதுரை ரோட்டரி கிளப்பில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

"இந்தியாவில் 30 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. இவைகள் மாதத்தில் 9-லிருந்து 10 நாட்கள்தான் வேலை செய்கின்றன. ஒவ்வொரு கைத்தறியையும் சார்ந்து சராசரியாக 5 பேர் பிழைக்கிறார்கள். ஆகையால் 150 லட்சம் மக்கள் சுகமாக வாழ்வதும் வாழாததும் கைத்தறியைப் பொறுத்ததாகவே இருக்கிறது. மேலும் கைத்தறித் தொழிலில் சில குறிப்பிட்ட பகுதிகளில் பெரும்பான்மையான மக்களால் மேற்கொள்ளப்படும் தொழிலாக இருக்கிறது. ஆகையால், கைத்தறித் தொழில் வீழ்ச்சியடைந்தால் இப்பகுதிகள் பஞ்சப் பகுதிகளாய்விடுகின்றன.

கைத்தறித்தொழில் இன்று எந்த அளவு துயரடைகிறது என்பது எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அண்மையில் நூல்விலைப் பஞ்சம் நிறைந்த இத்தொழிலுக்கு மற்றொரு கஷ்டமும் வந்திருக்கிறது. முன்பெல்லாம் 20 கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு மாஸ்டர் வீவர் இருந்தார். மாஸ்டர் வீவரால் சில கெடுதல்கள் இருக்கலாம். ஆனால் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய முயற்சிகளும், தூண்டுதலும் மாஸ்டர் வீவர்களால் ஏற்பட்டு வந்தன என்பதை மறுக்க முடியாது. ஆனால் இன்று மாஸ்டர் வீவர்

(5-ம் பக்கம் பார்க்க)

ஐவர் சிறையில்
இன்று
68-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை : 7—11—1953 சனி

குடிமுழுகி விடுமா?

நமது தி. மு. கழகத்தில் உள்ள முன்னணி வீரர்கள் அனைவரிலும், இளையவரிலும் இளையவர் நண்பர் கருணாநிதி. சொல்லாற்றல் மிக்கவர். செயலாற்றும் ஆர்வத்தை மூட்டுவதில் அவருக்கு இணை அவரேதான்.

உடைந்த உள்ளத்தையும் உணர்ச்சி கொள்ளச் செய்வார்; சோம்பலைப் போக்கி, சோர்வைக் களைந்து, கொண்ட குறிக்கோளில் கருத்தைச் செலுத்திடச் செய்யும் ஆற்றல் அவருடைய சொற்களுக்கு உண்டு.

கொள்கைப் பற்று அவருக்கு உடும்புப் பிடி. கொள்கையைக் குறை கூறுபவர்களைக் கண்டால், வேல் போன்று தைக்கும் சொற்களை, வெடுக்கென்று வீசுவார். இளமைக்கேற்ற இயல்பு.

அச்சம் அறியாத இளங்காளை. இடைபறாது, சளைக்காமல், சலிக்காமல் உழைக்கும் உள்ளம். கட்டுத் தோழர்களிடம் பற்றுப் பாசம் கொண்டுள்ள நெஞ்சம்.

எனவே, பொதுக் குழு, அவமானச் சின்னமான 'டால்மியாபுரம்' என்ற பெயரை மாற்றி, கல்லக்குடி என்ற பெயரைக் காணும் அறப்போராட்டக் குழுவிற்கு, கருணாநிதியைத் தலைவராக்கிற்று. இழந்ததை மீண்டும் பெறும் திராவிடர் தன்மானப் போருக்கு, முதல் களபலி ஆன பெருமை நண்பருக்கே கிடைத்திருக்கிறது. மகிழ்ச்சிக்குரிய செய்தி திராவிடருக்கு. இதுகுறித்து, முதறகண், அமைச்சர் ஆச்சாரியாருக்கு நாம் அனைவரும் நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

நண்பர் கருணாநிதி அறப்போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு சில திங்களுக்குமுன் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு, உடல் இளைத்தார் என்பதை அனைவரும் அறிவர். இந்தக் காங்கிரஸ் சர்க்காருக்கும் அது தெரியும்.

அவர் செய்த குற்றம் மிகமிகச் சாதாரணம். அதிகாரிகளின் முகத்தில் திராவகத்தை ஊற்றி, கொலை செய்ய எத்தனித்து, தூக்கு மேடைக்குப் போன காங்கிரஸ் ஊழியர்கள் உயிரைக்கூட அரும்பாடுபட்டு திரும்பப் பெற்றுவந்தவர் அமைச்சர் ஆச்சாரியார். மடிபிச்சை கேட்ட ஆச்சாரியாருக்கு உயிர் பிச்சை கொடுத்த வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்களுக்கு இருந்த, பெருந்தன்மையும் மனித உள்ளமும்கூட அமைச்சரான ஆச்சாரியாரிடம் இல்லாமல் இருப்பது வேதனைதரும் விசித்திரம்தான். அமைச்சர் ஆச்சாரியார் 'அறத்தின் நீங்கின ஆச்சாரியார்' என்ற கம்ப இலக்கியத்திற்குச் சிறந்ததோர் இலக்கணமாக அமைந்துபோய் இருக்கிறார். என்பது வியப்புக்குரியது அல்ல. நாம் இதுவரை, அவரைப் புரிந்துகொள்ளாமல் இருந்ததுதான் பெரும் வியப்பு!

காங்கிரஸ் ஊழியர்களின் திராவக வீச்சு கொலைக் குற்றத்தையும், கருணாநிதி, தம்முயிரையும் திரணமாக மதித்து நடத்த செய்த குற்றத்தையும் ஒப்பு வைத்துப் பார்ப்பவர்கள் ஒரே ஒரு முடிவிற்குத்தான் வருவர். அதாவது, கருணாநிதி புரிந்த குற்றம் சாதாரணம்—கொடுக்கப்பட்டுள்ள தண்டனை மிக மிகக் கூடுதல் என்ற முடிவிற்கே வருவர்.

ஐந்து மாத சிறைவாசம்; ரூ. 35 அபராதம்—கட்டத் தவறினால் மேலும் ஒரு திங்கள் சிறைவாசம்—மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பு இது. அவர் இப்பொழுது சிறையிலே இருந்து வருகிறார். நான்கு திங்கள் முடியும் கட்டத்தில் இருக்கின்றது. இன்னும் சில நாட்களே உள்ளன, நண்பர் வெளியில் வந்து, என்றும்போல் தொடர்ந்து இயக்கப் பணி புரிய

இதற்குள்ளாக என்ன அவசரம் வந்துவிட்டதோ தெரியவில்லை ஆச்சாரியார் சர்க்காருக்கு, அவசர அவசரமாக அவருக்கு விதித்திருந்த அபராதத் தொகையான ரூ. 35-ஐ வசூலிக்க? ஆக்கப் பொறுத்தது, ஆறப் பொறுக்கக்கூடாதா! அவர் வெளியில் வந்த பிறகுதான், அவருடைய சொத்தை ஜப்தி செய்து, அபராதத் தொகையை ஈடு செய்துகொள்ளக் கூடாதா? இந்த நியாயமான ஆனால் சாதாரணமான முறையை அமைச்சர் ஆச்சாரியார் மேற்கொண்டு இருக்கலாம். இதனால் ஒன்றும் காங்கிரஸ் சர்க்காருக்குத் தலைமுழுகிப்போய் விடாது!

'சொறி பிடித்தவன் கையும், இருப்பு பிடித்தவன் கையும் சும்மா இருக்காது' என்பார்கள். அதுபோல அல்லவா அமைச்சர் ஆச்சாரியார் தம் கையில் சிக்கிக்கொண்டுள்ள அதிகாரத்தை அக்கிரமமாகவெல்லாம் பிரயோகிப்பதிலேயே நாட்டமாக இருக்கிறார்! அவர் உறங்கும்போதுகூட அதிகாரத்தை யார்மீதாவது செலுத்திக்கொண்டே இருந்தால்தான், அது ஆனந்தசயனமாக இருக்குமோ என்னமோ, யார் கண்டார்கள்?

"நான் சர்வாதிகாரியானால் பள்ளித் தேர்வையே தொலைத்து விடுவேன்"

நடைமுறைப் பயிற்சிக் கல்வியே நாட்டிற்கு தேவை

கல்வித் தரத்தில் தேசியம் பார்க்காதீர்! அவனைத்துலகத் தரம் அவசியமே!!

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்கள் அறிவுரை

சென்னை, நவ. 7—

"எல்லாக் கல்விகளும் குறிப்பாகத் தொழில் சம்பந்தமான கல்விகள் அனைத்து உலக நிலைக்கேற்பத் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்று நம்புகின்றவர்களில், நானும் ஒருவன். கல்லூரிச் சம்பந்தமான அலுவலாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரும் தங்கள் எல்லாவிதமான முயற்சிகளிலும் அனைத்து உலக அளவுகோலை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று, நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன். என்னுடைய அனுபவத்தின் காரணமாகவே நான் இப்படிச் சொல்கிறேன். நான் அடிக்கடி மேல்நாடுகளுக்கு சென்று பார்த்ததாலேயே நான் இம்முடிவுக்குவர நேர்ந்தது."

—இவ்வாறு, கிண்டி பொறியியல் கல்லூரியில் நடத்தப்பட்ட கலை விழாவில், நாடகப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசு வழங்கும் விழாவிற்குத் தலைமை தாங்கிய சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

இம்மாநிலத்திலுள்ள கல்விக்கூடங்கள் கலைத் துறையில் ஒரு குறிப்பிட்ட நிலை இருத்தல் வேண்டும் என்பதற்காகத் தம்மால் இயன்ற வரையில் முயன்று வந்துள்ளன என்பதில் ஐயமில்லை. ஆனால், நான் குறிப்பிட்ட இந்தத் துறையில் தம் கவனத்தைச் செலுத்த இயலவில்லை. நான் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால், பள்ளிக்கூடத் தேர்தல்கள் நடத்துவதையே ஒழித்துவிடுமாறு ஆலோசனை கூறுவேன். பதக்கங்களைப் பரிசாகப் பெற்று, முதன்மையில் தேர்தலில் வெற்றிபெறும் மாணவர்கள்; பெரும்பாலான தொழில்களில், குறிப்பாகப் பொறியியல், மருத்துவம் சம்பந்தமான தொழில்களில் தோல்வியடைவதை நான் காண்பதாலேயே இப்படிக் கூறுகிறேன். வைத்தியம், பொறியியல், விவசாயம் சம்பந்தமான கல்விகளில் நடைமுறைப் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். புத்தகத்திலிருந்து படித்துப் போதிப்பதை அடியோடு ஒழித்துவிட்டு, பேராசிரியர்கள் 'நடைமுறைப் பயிற்சி' அளிக்கும் இடத்திலேயே கொஞ்சம் புத்தகப் படிப்புச் சொல்லிக் கொடுத்தால் போதும் என்றுகூட நான் சொல்வேன்."

பொறியியல் கல்வியில், 'போஸ்ட் கிராட்ஜுவேட்' படிப்பு புகுத்துவது சம்பந்தமாக அவர் பேசுகையில், "டிசம்பர் மாதத்தில் நடைபெறப்போகும் சர்வ பல்கலைக் கழக போர்டு கூட்டத்தில் இது சம்பந்தமாக ஆலோசிக்கப்படும்," என்று குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில, "ஒவ்வொரு மாணவரும் தங்கள் விருப்பத் தொழிலாக ஏதாவதொன்றைக் கொள்ள வேண்டுமென்றும், நாடகத் தொழில் பயனுடையதென்றும், ஓவியம், தோட்ட வேலை, மலையேறுதல், படகு விடுதல் முதலிய தொழில்களில் ஏதாவதொன்றில் ஒரு மாணவன் பழகியிருப்பானேயானால், அதற்காக அவன் பெருமைப்படுதல் வேண்டும்," என்றும் கூறினர்.

பம்பாயில் என். எஸ். இளங்கோ

★

தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் கீழ்க்காணும் தேதிகளில், கீழ்க்கண்ட இடங்களில் பேசுவார்.

8—11—53	தாராவி (பம்பாய்) வாழை கட்டவாடி மைதானம்
9—11—53	சையான் (பம்பாய்) அனுமார் கோயில் திடல்
12—11—53	கோலாபா (பம்பாய்) காமா ஹால்

தோழர் இளங்கோ பம்பாய் சேர்ந்தார்

ரயில் நிலையத்தில் மகத்தான வரவேற்பு

5-11—53 வியாழன் பிற்பகல் 2-30 மணிக்கு தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் பம்பாய் தாதர் ரயில்வே நிலையத்தை வந்தடைந்தார். அதுபோது பம்பாயிலுள்ள பல கிளைக் கழகங்களின் சார்பில் தோழர்கள் வரவேற்பில் கலந்துகொண்டனர் மாதுங்கா, தாராவி, சயன், கொலபா, பாண்டுப், கார்நவல்லி ஆகிய கிளைக் கழகங்களின் சார்பில் மலர்மாலை அணிவித்து 'அண்ணா வாழ்க; திராவிட நாடு திராவிடருக்கே' என்ற ஒலிமுழக்கம் செய்தனர்—அன்று இரவு 8-30 மணிக்கு ரயிலில் புறப்பட்டு 6—11—53-ம் தேதி அன்று ஆமதாபாத்தில் நடைபெறவிருக்கும் கழகப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றார்.

அபராத சிறு தொகையான ரூ. 35-ஐ வசூல் செய்ய ரூ. 10,000 பெறுமானமுள்ள 'மோட்டார் காரை'யே ஜப்தி செய்ய அதிகாரிகள் முற்பட்டு விட்டனர். ரூ 35-க்கு ஈடாகக் கூடிய தட்டுமுட்டுச் சாமான்கள், நண்பர் வீட்டில் இல்லாமலா போய்விட்டது? அவைகளை ஜப்தி செய்ய அதிகாரிகள் முன்வந்து இருக்கலாமே? ஆனால், அமைச்சர் ஆச்சாரியாரின் அதிகாரிகள், கருணாநிதியின் 'கார்' மீதுதான் 'கண்'ணாக இருந்திருக்கிறார்கள். ஏதாவது அமைச்சர்களின் ஊர்ப் பணிக்குத் தேவையாக இருக்கலாம் என்று அதிகாரிகள் நினைத்திருக்கக்கூடும் என்று சொல்வதற்கில்லை. வேறு காரணம் எதுவாக இருந்தாலும், அமைச்சர் ஆச்சாரியாரின் அடக்குமுறை, அவருடைய சொந்த செல்வாக்கையும், சேர்ந்துள்ள கட்சியின் செல்வாக்கையும் தேய்த்தும், எதிர்ப்பாளர்களின் செல்வாக்கை உருவாக்கியும் வரும் வன்மை மிக்கப் படையாக இருப்பதை அமைச்சர் ஆச்சாரியார் அறியாதிருக்கிறார் என்று சொல்வதற்கில்லை, அறிந்தே செய்கிறார்!

★★★★★★★★★★★

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

117-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

116-வது நாள்

★★★★★★★★★★★

ஆலந்தூர் தி. மு. கழகத் தோழர்களுக்கு

இவ்வூர் தி. மு. கழக அலுவலகத்தில் 8-11-53 காலை 9 மணி அளவில் "அத்துக்குடி" வாரம் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கழக உறுப்பினர்கள், கழக ஆதரவாளர்கள் அனைவரும் வந்திருந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காந்தை திரு. வி. க. சொற்பொழிவு மன்றம்

தஞ்சை, நவ. 5—

1-11-53ல், இம்மன்றப் பொதுக்கூட்டம், தோழர் கணேசன் தலைமையில் கூடியது. அதுபோது, 'நாட்டுப் பிரிவினை' என்னும் பொருள்பற்றி தோழர்கள் இரா. கோடிலிங்கம், க. சண்முகம், ப. சி. கண்ணன், பாஸ்கரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அஸ்ஸாம் வடகிழக்குப் பகுதியினரின் வெறிச்செயல்

டாப்லா மலை ஜாதியினர் அதிகாரிகள் உட்பட 115 நபர்களைக் கொன்றுவிட்டதாக தகவல்

கடும் முறைகளைக் கையாள யூனியன் சர்க்கார் தீர்மானம்

புது டில்லி, நவ. 4—

அஸ்ஸாம் மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியான அபோர் மலைப்பகுதியிலுள்ள டாப்லா மலைஜாதியினர், அங்கு சென்ற யூனியன் சர்க்கார் அதிகாரிகள் சிலரை அக்கிரமமாகக் கொன்றுவிட்டார்கள் என்ற செய்தியின் சுருக்கம், ஏற்கனவே வெளியாகியிருக்கிறது. அது குறித்து மேலும் விவரம் கிடைத்திருக்கிறது.

வடகிழக்கு எல்லைப்புற ஜென்சியைச் சேர்ந்த சாதாரண சிவில் அதிகாரிகள், பல கிராமத் தலைவர்கள், மலைஜாதியினரைச் சேர்ந்த கூலிகள், வழிகாட்டிகள், மொழிபெயர்ப்பாளர்கள், சிப்பாய்கள் புடைசூழ, சென்ற மாதம் 7-ந் தேதி, அலாங் என்ற ஜென்சியில் தலைநகரிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள்.

அபோர் குன்றுகளில் உள்ள டாஜின் பிரதேச வழியாகச் சென்று, அங்குள்ள மலைஜாதியினர்களிடம் நல்லுறவை ஏற்படுத்தியும், குறிப்பிட்ட இடத்தில் நிலையாகத் தங்கி, நல்வாழ்வு வாழ போதிப்பதுமே, இக்குழுவின் நோக்கமாகும். இத்தகைய நடவடிக்கையில் சிவில் அதிகாரிகள் ஈடுபடுவது வழக்கமாக நடைபெற்று வருவதாகும்.

இந்தக் குழு, குகார் என்ற இடத்தை அடைந்து, அங்கிருந்து அபான்காலி நதியின் கிழக்குக் கரையோரமாகச் சென்று, 22-ந் தேதி மோரி என்ற இடத்தைச் சேர்ந்தது.

மோரியில் இருந்த டாப்லா மலை ஜாதியினர், இந்தக் குழுவை உற்சாகமாக வரவேற்று, அதிகாரிகள் கூடாரமிட்டுத் தங்குவதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் ஆர்வத்தோடு செய்து கொடுத்தனர்.

மலை ஜாதியினருக்கு, உப்பை, குழுவில் இருந்தவர்கள் பரிமாறினர்.

தங்கள் தங்கள் கூடாரங்களில் தங்குவதற்கு குழுவினர் முனையும் பொழுது, 10 டாப்லா மலை ஜாதியினர், குழுவுடன் சென்ற அஸ்காம் சிப்பாய் தலைவரான மேஜர் ஆர். டி. சிங் அவர்களைத் தனிமையில் சந்தித்துப் பேச அனுமதி கோரினர். எந்த விதச் சந்தேகமும் கொள்ளாமல், மலை ஜாதியினரின் சந்திப்பு வேண்டுகோளுக்கு மேஜர் இணங்கினர்.

தாக்குகின்ற தொலைவில் மலை ஜாதியினர் வந்ததும் அங்குக் காவல் இருந்தச் சிப்பாய்களை, தங்கள் கைகளால் இருந்த பெரிய கத்திகளில் தாக்கிக் கொன்றனர்.

இதை ஓர் சமிக்ஞையாகக் கொண்ட, சுற்றியுள்ள காட்டுப் பகுதியில் மறைந்திருந்த 500-க்குக் குறையாத காட்டு ஜாதியினர் அப்படியே கூடாரங்களை வளைத்துக்கொண்டு குழுவில் இருந்த அனைவரையும் வெட்டிக் குவித்தனர். மேஜர் சிங்கும், மற்றொரு அதிகாரியான பூரா என்பவரும், வேறு இரண்டு சிப்பாய்களும், காட்டு ஜாதியினருடன் வீரமாகப் போராடி, மாணமடைந்தனர், என்று சொல்லப்படுகிறது. மற்றவர்களைப் பற்றி ஒன்றும் நிச்சயமான தகவல் கிடைக்கவில்லை.

மூன்று காட்டு ஜாதி கூலிகள் மட்டும் உயிர் பிழைத்து, இந்தத் துக்கச் செய்தியை உலகுக்கு அளித்துள்ளார்கள். குழுவில் இருந்த கிராமத் தலைவர்களும், கூலிகளும் அதிக உயிர்ச்சேதம் அடைந்திருப்பதாகவும், மற்றவர்களை மலை ஜாதியினர் பதைக்கப் பதைக்க கொலை செய்திருக்கின்றனர் என்றும் இவர்கள் கூறுகிறார்கள். மற்றவர்களைக் குறித்துத் தகவல் இல்லையானாலும், குழுவைச் சேர்ந்த, நபர்களைக் கைதிகளாகவும், பிரதியுபகாரம் பெறும் இலக்காகவும் மலை ஜாதியினர் பிடித்து வைத்திருப்பதாக, தப்பிப் பிழைத்தக் கூலிகள் சொல்லுகிறார்கள்.

மேஜர் சிங் குழுவுடன் சென்ற காலாஸ் காட்டு ஜாதியினருக்கும், டாப்லா மலை ஜாதியினருக்கும் இருந்துவந்த உட்பகையே, இந்தக் கேட்டிற்குக் காரணமாக இருக்கக் கூடும் என்று யூகிக்கப்படுகிறது. ஏற்கனவே, இந்த காலாஸ் ஜாதியினர்மீது டாப்லா ஜாதியினர் ஆதிக்கம் செலுத்தி வந்ததாகவும், காலாஸ் ஜாதியினர் யூனியன் சர்க்காரின் ஆதிக்கத்திற்குள்ளான பிறகு, டாப்லா ஜாதியினருக்கு ஏற்கனவே கட்டி வந்த கப்பத்தை, காலாஸ் ஜாதியினர் செலுத்த மறுத்துவிட்டதாகவும், அதன் பலனாகத்தான் இரு ஜாதியினரிடையேயும் உட்பகை ஏற்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மலைஜாதியினருக்குள் இது போன்ற தாக்குதல் ஏற்பட்ட பிறகு, இரு பிரிவின் முக்கியஸ்தர்களும் மாநாடு கூடி, சண்டையில் செத்தவர்களின் பிணங்களை அந்தந்தப் பிரிவினரிடம் ஒப்படைக்கும் வழக்கம் உண்டென்றும், இப்பொழுது அந்த மலைஜாதியினரிடை மாநாடு நடைபெற்றுவருவதால், அங்குள்ள சர்க்கார் அதிகாரிகள், தீவிர நடவடிக்கையில் ஈடுபடாமல் மாநாட்டின் முடிவிற்குக் காத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

மலைஜாதியினர் முடிவு தெரிந்ததும், மூன்று நான்கு வாரம் வரை நீடிக்கக்கூடிய ராணுவ நடவடிக்கை எடுத்துக்கொள்ள யூனியன் சர்க்கார் முடிவிற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

பொள்ளாச்சி

8—11—53 ஞாயிறு

இடம்: தேர் நிலையில்

பேச்சாளர்: கோவை சேழியன்

★

சாத்தூர்

8—11—53 ஞாயிறு மாலை

தலைவர்: வி. டி. நடராசன்

பேசுவோர்:

மதுரை எஸ். முத்து

கல்லிடை மன்னர்

விருதை ந. இராமசாமி

சன்யாட்சன்

★

வேலூர்

8—11—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு

இடம்: கோட்டை வெளியில்

பேசுபவர்:

முகவை ஆர். எஸ். பாண்டியன்

நெசவாளர்களுக்குப் பரிவு காட்டும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களின் எண்ணிக்கை விகிதம் குறைந்துள்ளது. 80 நெசவாளர்களுக்கு ஒரு மாஸ்டர் வீவர்தான் இருக்கிறார். கைத்தறித் தொழிலின் துயரங்கள் அதிகரித்துள்ளன வென்பதையும யாரும் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். கைத்தறித் தொழிலின் துயர்களைக் கண்டு நாம் அனுதாபம் காட்டாமல் இருக்க முடியாது.

உள்நாட்டில் கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பான மார்க்கெட் வேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள்.

கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியது அவசியமென்று சிலர், குறிப்பாக நமது முதலமைச்சர் கூறுகிறார். ஆனால், கைத்தறி நெசவாளரின் நலனில் உண்மையிலே முதல் அமைச்சருக்கு அக்கரையிருக்கிறதா? அல்லது மக்களின் ஆதரவைப் பெற இது ஒரு விளம்பர (ஸ்டண்ட்)ச் செயலா? அல்லது பொருளாதார விஞ்ஞான ரீதியற்ற ஒரு குறுக்கு வழி காணப்படுகிறதா?

கரைகள் உள்ள வேட்டி, சேலைகளை ஆலைகள் உற்பத்தி செய்யாமல் தடை செய்துவிட வேண்டுமென்று முதல் அமைச்சர் கூறுகிறார். குறிப்பிட்ட நீளத்துக்கும், அகலத்துக்கும் மேற்பட்ட துணிகளை உற்பத்தி செய்யக்கூடாதென அரசாங்கம் ஒரு உத்தரவிடுகிறதென வைத்துக்கொள்வோம். இந்தத் தடையுத்தரவை எவ்வாறு சமாளிப்பது என்று ஆலைகளுக்குத் தெரியும். அரசாங்கம் அனுமதிக்கும் அளவுக்குத் துணிகளை உற்பத்தி செய்து அவைகளை ஒன்று சேர்த்துத் தைத்துக் கொள்ளலாம் அல்லது விலை குறைவானதும், விரும்பத்தக்கதுமான ஒரு புது உடையில் மக்களைப் பழக்கப் படுத்திவிடலாம். மேலும் பொது மக்களின் விருப்பம் எதில் இருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் கால்சட்டைகள் அணியத் தொடங்கிவிடலாம். வேட்டியும் வேண்டாம், சேலையும் வேண்டாமென வெறுத்து ஒதுக்கிவிடக் கூடிய ஆண்களையும், பெண்களையும் நாம் காணும்படி நேரலாம். (சிரிப்பு)

நமது முதல் அமைச்சர் கூறும் வழிகளில் என்ன தவறு இருக்கிறது என்பதை நாம் காணவேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பளிக்க உள்நாட்டு மார்க்கெட் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டியது அவசியமே. ஆனால் அத்துடன் இதில் ஆலைகளும் பங்கு கொள்ளுமாறு சில கொள்கைகள் கையாளப்பட வேண்டும். இல்லையேல் இதனால் நெசவாளர்களுக்கோ அல்லது பொது மக்களுக்கோ ஒருவித பயனும் ஏற்படாது.

உள்நாட்டு மார்க்கெட் பாதுகாப்பு அளிப்பதில் "ஆலை உற்பத்தியாளர் முறை" அனுசரிக்கப்படாவிட்டால், சட்டத்தை நிறைவேற்றுவதில் ஆலைகளுக்குக் கடமை இல்லாமற்போய்விடும். மேலும் எல்லா நடவடிக்கைகளையும் மீறுவதற்கான வழிவகைகளைக் காண முயலுவதில் அவர்கள் ஈடுபட்டு விடுவார்கள். ஆகையால் கைத்தறிக்கு நன்மை செய்வது போல மேற்போக்காகக் காண்பிக்கும் முதல் அமைச்சர் உண்மையில் அவர்களுக்கு நன்மை செய்யாதவராகிறார்."

தேர்தலில் நிற்க அஞ்சும் ஆச்சாரியார் தனது செல்வாக்குபற்றி பேசுவது அபத்தம்

உறுப்பினர்களில் சிலர்தான் எதிர்ப்பது உண்மையானால் சி. ஆர். உறுப்பினர் கூட்டத்தைக் கூட்ட தயங்குவதேன்?

கோவில்பட்டி, நவ. 5—

"ஆச்சாரியாரை ஆதரிப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் என்றும், எதிர்ப்பவர்கள் 30 பேர்தான் என்றும் காங்கிரசு ஏடு கூறுகிறது; இது உண்மையானால், சட்டசபைக் காங்கிரசுக் குழுவைக் கூட்டுவதில் ராஜாஜி ஏன் தயங்க வேண்டும்?"

என்று, ஆச்சாரியார் எதிர்ப்பு இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்து வருகிற சட்டசபை உறுப்பினர் ஒருவர் கேட்டுவிட்டு, அவர் மேலும் தொடர்ந்து கூறியதாவது:—

"ஆச்சாரியார் தனக்கு செல்வாக்கு இருக்கிறது என்று கூறுகிறார். அப்படி இருந்தால், பொதுத் தேர்தல் மூலமாக வந்திருக்கலாம். 'பொதுமக்கள் என்மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்; ஒருசில சட்டசபை உறுப்பினர்கள்தான் எதிர்க்கிறார்கள்,' என்ற கூற்று பொருத்தமற்றது.

ஆச்சாரியாரை எதிர்ப்பவர்கள் 30 பேர் உள்ள 'மைனாரிட்டி' என்று காங்கிரசு ஏடு பிரசாரம் செய்கிறது. ஆதரிப்பவர்கள் வேண்டுமானால் அவ்வளவு பேர் இருக்கலாமே தவிர, எதிர்ப்போர் அதிகம். இதை அண்மையில் கூடும் சட்டசபைக் காங்கிரசுக் குழுவின் கூட்டத்தில் காணலாம்.

நேருவுக்கு அனுப்பப்பட்ட ஆச்சாரியார் எதிர்ப்பு மகஜரில் அதிகமானவர்கள் கையொப்பமிட்டுள்ளதை டாக்டர் வரதராஜுலுவின் அறிக்கை மூலம் தெளிவாகிறது. நேரு அகில இந்தியக் காங்கிரசுக் குழுவின் தலைவர் என்ற முறையில்தான் ஆச்சாரியார் எதிர்ப்பு மகஜர் அனுப்பப்பட்டதே தவிர, அவருடைய உதவியை நாடியல்ல.

உண்மையான விடயங்களைக் கட்சிக் கூட்டங்களில் வாதிக்கலாமே தவிர, கன்னா பின்னா என்று பத்திரிகைகளில் வெளியிடுவது கூடாது. ஆனால் பொதுமக்களே பார்த்துத் திகைக்கும் படியான பல விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

'அரசியல் தியாகிகள், 5 ஏக்கர் நிலம் ... [illegible] ... யார் சலுகை காட்டவில்லை என்பதற்காக எதிர்ப்பு இயக்கம் நடைபெறுகிறது என்ற கூறுவது தவறு. இது, பொதுமக்களைத் தங்கள் பக்கம் திருப்பச் செய்யும் சூழ்ச்சியாகும்."

வெளிவந்துவிட்டது!

தி. மு. கழகத் தலைவர்கள் ஐவரின் நீதிமன்ற வாக்குமூலங்கள்

THE ANSWER

[ஆங்கிலம்]

விலை: 0—6—0 தபாலில் அனுப்ப 0—7—0

விவரங்கட்கு:

(1) தி. மு. க. தலைமை நிலையம், 'அறிவகம்,' சென்னை-13

(2) பத்மா பிரஸ், காஞ்சீபுரம்.

★

குறிப்பு:—ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் வேண்டுவோர், காஞ்சீபுரம், பத்மா பிரஸ்க்கே எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

கல்லக்குடி அறப் போராட்ட வழக்கு

—(:)—

12 தோழர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன

திருச்சி, நவ, 7—

தோழர்கள் கண்ணதாசன், தர்மலிங்கம், தர்புசாமி ஐ. எம். ஷெரீப், ராதாகிருஷ்ணன், ராமதாஸ் உள்ளிட்ட 24 தி. மு. கழகத் தோழர்கள்மீது தொடரப்பட்ட வழக்கு, 2—11—53-லும், 3—11—53-லும் திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கே. பி. ராதாகிருஷ்ண மேனன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்விரு தினங்களிலும் 12 தோழர்களின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டு, மீண்டும் வழக்கு 9—11—53-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தோழர்கள் சார்பில், திருச்சி வழக்கறிஞர் தோழர் டி. பி. சண்முகசுந்தரம், பி.ஏ., பி.எல்., அவர்களும், சர்க்கார் தரப்பில் தோழர் எஸ். மகாதேவ சாஸ்திரி அவர்களும் ஆஜரானார்கள்.

"15—7—53ல், டால்மியாபுரத்தில், அதிகாரிகளை வேலை செய்ய முடியாதவாறு தடுத்து, கற்களால் அடித்துக் காயமுண்டாக்கியிருக்கிறீர்கள் என்று சாட்சிகள் கூறுகிறார்கள்; இதற்கு என்ன கூறுகிறீர்கள்?" என்று சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் எல்லா தோழர்களையும் கேட்டார். எல்லாத் தோழர்களும், "நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை; எங்களுடைய தி. மு. மத்திய கழகத்தின் லட்சியங்களை நிறைவேற்றவே இந்தப் போராட்டத்தில் இறங்கினோம்," என்றார்கள்.

முதலாவதாக தோழர் கண்ணதாசன் கூறிய வாக்குமூலமாவது:—

"தி. மு. கழக மத்தியக் குழு டால்மியாபுரத்தை, கல்லக்குடியாக பெயர் மாற்றப் போராட்டம் நடத்த வேண்டும் என்ற தீர்மானப்படி நான் போராட்டத்தில் இறங்கினேன். நான் 3-வது குழுவுக்குத் தலைமை வகித்தேன். நானும், என் படையில் சேர்ந்தவர்களும் அஹிம்சா முறையில் எங்களுடைய லட்சியங்களை நிறைவேற்ற அமைதியாகச் சென்றோம். டால்மியாபுரம் ரயில்வே பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருக்கும்போது, ரயில் வண்டி வந்ததும், போலீசார் என்னை அடித்து, காலால் உதைத்து கூட்ஸ் வண்டிக்குப் பின்னால், இழுத்து எறிந்துவிட்டார்கள். அடி பலமாகயிருந்ததால் நான் என்னுடைய சுயநினைவை இழந்து மயக்கமுற்றேன். நான், கார் மூலம் லால்குடி மருத்துவ விடுதிக்குக் கொண்டுபோகப்பட்டேன். எனக்குத் தலையில் பலத்த அடி விழுந்திருந்தது. எனக்கு முதல் சிகிச்சை செய்யப்பட்டது. 3 மணி நேரத்துக்குப்பின் போலீசார் என்னைக் கைது செய்தார்கள்."

அவரை நீதிபதி கேட்ட கேள்விகளாவது:—

கே: ரயில் வண்டி 1-58 மணிக்கு வந்ததும் நீங்கள் எஞ்ஜினுக்கு முன் படுத்தீர்கள் என்று சாட்சிகள் கூறுகிறார்களே, என்ன சொல்லுகிறீர்?

ப: நான் தண்டவாளத்தில் படுக்கவில்லை.

கே: 1-58 மணிக்கு ரயில் வண்டி வந்தபோது, தி. மு. கழகக் கொடியையும், அடையாளச் சின்னத்தையும் காட்டினீர்களா?

ப: ஆம்; காட்டினேன்.

கே: போராட்டத்தைப் பற்றி 14—7—53-ல், பொதுக் கூட்டத்தில் பேசினீர்களா?

ப: ஆம்; பேசினேன்.

கே: 15—7—53-ல், போலீசார் அடித்ததால் காயங்கள் உண்டாயின என்று சாட்சி கூறுகிறீர், என்ன சொல்லுகிறீர்?

ப: ஆம்; எனக்குக் காயங்கள் இருக்கின்றன.

கே: நீங்கள் தி. மு. கழக உறுப்பினரா?

ப: ஆம்; நான் தி. மு. கழக உறுப்பினர்தான்.

இரண்டாவதாக தோழர் வடிவேலு கூறிய வாக்குமூலமாவது:—

"தி. மு. கழகப் போராட்டத்துக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. போராட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. 3-ம் படை ரயில்வே பிளாட்பாரத்திற்கு வந்ததும் போலீசார் அவர்களை அடித்தனர்; என்னையும் அடித்தார்கள். நான் வெளியே வந்துவிட்டேன். பிறகு துப்பாக்கிப் பிரயோக சப்தம் கேட்டது. ஒருவர், 'தலையைக் காட்டாதே; துப்பாக்கியால் சுடுகிறார்கள்,' என்று உள்ளே கூப்பிட்டார். பிறகு, உள்ளே சென்றேன். சப்தம் நின்றதும் வெளியே சென்றேன். சாலையில், என் பெரியப்பா மகன் நாராயணசாமி குண்டடிபட்ட காயங்களுடன் இருந்தான். அவனை லால்குடி மருத்துவ விடுதிக்குக் கொண்டுபோனேன். அங்கு டாக்டர் இல்லை—நான், அடிபட்டவனுக்கு டீ, காப்பி வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அங்கே என்னைப் போலீசார் கைது செய்தார்கள்."

கே: 1-58 மணிக்கு ரயில் வந்ததும் தண்டவாளத்தில் உட்கார்ந்ததாக சாட்சிகள் கூறுகிறார்களே, நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: நான் உட்காரவில்லை.

கே: நீங்கள், கற்களால் சாட்சிகளை அடித்துக் காயமுண்டாக்கினீரா?

இல்லை.

கே: போலீசுத் தடியடியால் உங்களுக்குக் காயங்கள் உண்டாயினவா?

ப: ஆம்.

கே: நீர், மூங்கில்பாடி தி. மு. கழகச் செயலாளரா?

ப: ஆம்.

மூன்றாவதாக தோழர் சண்முகத்தின் வாக்குமூலமாவது:—

"நான், தி. மு. கழகப் போராட்ட 3-வது படை ரயில்வே பிளாட்பாரத்திற்குப் போகும்போது நானும் கூடவே சென்றேன். போலீசார், எல்லாரையும், என்னையும் அடித்து கூட்ஸ் வண்டிக்குப் பின்புறம் தூக்கி எறிந்து விட்டார்கள். பொதுமக்கள் என்னை லாரியில் ஏற்றி, லால்குடி மருத்துவ விடுதியில் சிகிச்சைக்குக் கொண்டு போனார்கள். லால்குடி மருத்துவ விடுதியில் நான் கைது செய்யப்பட்டேன்." "நான் எஞ்ஜின் தண்டவாளத்தில் உட்காரவில்லை. நான் தி. மு. கழகக் கொடி, அடையாளச் சின்னங்களைக் காட்டவில்லை. நான் தி. மு கழக அங்கத்தினர்."

நான்காவதாக தோழர் தஸ்தகீர் கூறிய வாக்குமூலமாவது:—

"நான் தி. மு. கழக 3-வது படைத் தொண்டர்களில் ஒருவன். நாங்கள் டால்மியாபுரம் பெயர்ப் பலகையில் கல்லக்குடி பெயர்த் தாளை ஒட்டிய பிறகு பிளாட்பாரத்திற்கு வந்தோம் சிறிது நேரத்திற்கெல்லாம் மெயில் வந்தது. ரயில் வண்டி வந்ததும் போலீசார் எங்களை அடித்து கூட்ஸ் வண்டிக்குப் பின் தள்ளிவிட்டனர். எனக்கு அடிபட்டதால் லால்குடிக்குக் கொண்டு போகப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டேன்."

"நான் ரயில் தண்டவாளத்தில் உட்காரவில்லை. நான் தி. மு. கழக அங்கத்தினன். லால்குடி மருத்துவ விடுதியில் நான் கைது செய்யப்பட்டேன்."

ஐந்தாவதாக தோழர் ரெங்கராஜன் தந்த வாக்குமூலமாவது:-

"டால்மியாபுரம் ரயில்வே நிலைய வேலி ஓரமாக நின்றேன். என்னையும், 3-வது தி. மு. கழகத் தொண்டர் படையையும் போலீசார் அடித்தனர். நான் லால்குடி மருத்துவ விடுதிக்குக் கொண்டுபோகப் பட்டேன்."

"நான் ரயில் தண்டவாளத்தில் உட்காரவில்லை; தி. மு. கழகக் கொடி காட்டவில்லை; தி. மு. கழக அங்கத்தினர் அல்ல."

ஆறாவதாக தோழர் துரைராஜ் வாக்குமூலமாவது:—

"15—7—53-ந் தேதி டால்மியாபுரம் பெயர் மாற்றப் போராட்டத்தில் கல்லக்குடி என்ற பெயர்த் தாளை ஒட்டியதும், நான், கோவண்டாக்குறிச்சிக்குப் போய்க்கொண்டிருக்கும்போது துப்பாக்கி சப்தம் கேட்டது பிறகு திரும்பி வந்து பார்த்தேன். ஒரு பையன் குண்டடிபட்டு கீழே விழுந்தான் அவனைத் தூக்கினோம். எனக்கும் குண்டடிபட்டது. லால்குடி மருத்துவ விடுதிக்குச் சென்றோம். நான் மாலை 5 மணிக்குக் கைது செய்யப்பட்டேன்."

"நான் எஞ்ஜின் முன் உட்காரவில்லை. தி.மு.கழகக் கொடி காட்டவில்லை; என் கைவிரலில் குண்டடியால் காயம் ஏற்பட்டது"

ஏழாவதாக தோழர் சூசை கூறிய வாக்குமூலமாவது:—

"நான் உழவு மாடு வாங்க 14—7—53ல் டால்மியாபுரம் சென்றேன். மாடு கிடைக்கவில்லை. இரவு அங்கேயே தங்கிவிட்டு மறுநாளும் மாடு வாங்கச் சென்று, மாடு கிடைக்காததால், வீடு திரும்ப டால்மியாபுரம் ரயில்வே நிலையம் வந்து ரயில் வண்டியில் ஏறினேன். கூட்டம் அதிகமாயிருந்தது. வண்டியில் ஒருவர், 'அடே போடா,' குண்டு வருது; உட்காருடா,' என்றார் அவர் சொல்லி முடிப்பதற்குள் குண்டு என் மார்பில் பட்டது பிறகு ரயில் நகர்ந்து லால்குடி சென்றதும் நான் கீழே இறங்கப் போகும்போது சிலர் என் தொண்டையில் குண்டு இருப்பதாகக் கூறினார்கள். பார்த்தேன், குண்டும் குண்டடியும் இருந்தது. லால்குடி மருத்துவ விடுதிக்குச் சென்றேன். டாக்டர் மருந்துபோட்டு 'சரி போடா', என்றார். நான் திரும்பி வரும்போது கைது செய்யப்பட்டேன்." "நான் தண்டவாளத்து பக்கமே போகவில்லை. நான் ஒரு பாவமும் அறியேனுங்க. கொடி காட்டலிங்க."

எட்டாவதாக தோழர் மருதநாயகம் கூறிய வாக்குமூலமாவது:—

"டால்மியாபுரத்தில் கூட்டம் ஏராளம்; சப்தம் அதிகமாயிருந்தது. நான் ரயில் வண்டியில் ஏறினேன். பிறகு குண்டடி என் விரலில் விழுந்தது. நான் லால்குடிக்குச் சிகிச்சைக்குச் சென்றேன்."

ஒன்பதாவதாக தோழர் முனுசாமி கூறிய வாக்குமூலமாவது:—

"அரியலூரிலிருந்து டால்மியாபுரம் வந்தேன். போலீசார் தடியால் அடித்தனர். பிறகு குண்டடி என் கையில் பட்டது. ரத்தம் வராதபடி கையில் துண்டால் கட்டினார்கள். அங்கலாய் நாட்டுச் கழகத் தலைவர் தோழர் கோவிந்தன் தனதுடைய மோட்டார் சைக்கிளில் என்னை லால்குடி மருத்துவ விடுதிக்குக் கொண்டு போனார்.

பத்தாவதாக, தோழர் ஏ. பி. நிமிலன் கூறிய வாக்குமூலமாவது:—

"நான் 3-வது தொண்டர் படையில் பெயர் மாற்றப் போராட்டத்தில் டால்மியாபுரத்தில் கலந்துகொண்டேன். நாங்கள் ரயில்வே பிளாட்பாரம் வந்ததும், போலீசாரால் தாக்கப்பட்டு, கூட்ஸ் வண்டிகளுக்கு இடையில் உள்ள சந்து வழியால் வெளியே எறியப்பட்டோம் பலத்த அடியால் சுயநினைவு இல்லை. லால்குடிக்குக் கொண்டு போகப்பட்டேன்."

"நான் எதுவும் பலாத்கார முறையில் செய்யவில்லை. நான் தி. மு. கழகக் கொடி காட்டினேன். நான் தி. மு. கழக உறுப்பினர்தான்."

பதினோராவதாக தோழர் சாம்பசிவம் உடல்நலமில்லாததால் அவருக்குப் பதிலாக 18-வது எதிரி தோழர் ராமதாஸ் வாக்குமூலம் தந்தார்:—

"அவர், தி. மு. கழகத் தொண்டர்; 3-வது படையைச் சேர்ந்தவர். ஆனால், ரயில்வே நிலையத்துக்குள் போவதற்குள்ளாகவே வெளியே போலீசாரால் தடுக்கப்பட்டார். அவர் தி மு கழக மத்திய குழு உறுப்பினர்.'

பன்னிரண்டாவதாக தோழர் ரெத்தினம் தந்த வாக்குமூலமாவது:—

"நான் வேடிக்கை பார்க்கச் சென்றவன். போலீசார் அடித்ததும் வண்டிக்குள் ஏறினேன். வண்டியில் என் கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. லால்குடிக்கு வந்து மருத்துவ விடுதிக்கு அனுப்பப்பட்டேன். நான் அந்த உறையூர் போலீசு சப்-இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டேன். நான் தி. மு. கழக உறுப்பினர் அல்ல."

பிறகு வழக்கு 9—11—53-ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

"நம் நாடு" ஏஜெண்டுகட்கு

"நம் நாடு" பில் பாக்கித் தொகையை, இன்று, 10-11-53-க்குள் அனுப்பாத எல்லா ஊர்கட்கும், "நம் நாடு" அனுப்புவது நிறுத்திவைக்கப்படும். தங்கள் டிபாசிட் தொகையை விட பில் பாக்கி அதிகமுள்ளவர்கட்கும், "நம் நாடு" அனுப்புவது நிறுத்தி வைத்திருக்கிறோம். ரூபாய் பாக்கி முழுதும் வராமல், 'நம் நாடு' அனுப்புவதற்கில்லை. "நம் நாடு" நிறுத்திய பிறகு, வருந்தப்பட்டுக் கடிதங்கள் எழுதிக்கொண்டும், பாக்கி அனுப்பத் தவணை கேட்டுக்கொண்டிருப்பதிலும் பயன் இல்லை. 2, 3 மாதங்கட்கு ஒரு முறை ரூபாய் அனுப்பிவைக்கலாம் என்று உரிமை பாராட்டும் ஏஜெண்டுத் தோழர்கள், டிபாசிட் தொகையையும், தாராளமாகக் கட்டிவிட வேண்டும்.

நம் சொந்த அச்சு இயந்திரம் பூட்டப்பட்டு, அச்சடிக்கும்வரையில் "நம் நாடு" இதழை, குறிப்பிட்ட ரயில்களில் அனுப்ப முடியவில்லை. பெரிதும் முயன்று, தினசரி, நேரத்தில் அனுப்பிவைக்கின்றோம்.

"நம் நாடு" பார்சல்கள் சேர்ந்து வருகின்றது என்ற கடிதங்களும், மீதியுள்ள இதழ்களை திருப்பி வாங்கிக்கொள்ளும்படி கடிதங்களும் ஏஜெண்டுத் தோழர்கள் எழுதுகின்றார்கள். "நம் நாடு" இதழ் திருப்பி வாங்குவதற்கில்லை. குறைந்த அளவு தேவைக்கு மட்டும் எழுதலாம்.

"நம் நாடு" (5) ஐந்து இதழ்கட்குக் குறைந்து தபாலில், ஏஜெண்டுகட்கு இனி அனுப்புவதற்கு இல்லை என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கின்றோம்.

பொறுப்பாளர்,
"நம் நாடு,"
இராயபுரம், சென்னை-13.

"நம் நாடு" அறிவிப்பு

"நம் நாடு" அலுவலகத்தில் தற்காலிகமாக வேலை பார்த்து வந்த தோழர்கள் ஏ. எஸ். வேணு, பி.க. இராஜகோபால் ஆகிய இருவரும், 18—9—53-ல வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

சென்னையில், "நம் நாடு"; பத்திரிகைக்கு விளம்பரம் சேகரிக்கவும், சந்தாக்கள் சேர்க்கவும், சந்தா பாக்கி ரூபாயை வசூலிக்கவும் ஒருவரையும் இதுவரை நியமிக்கப்படவில்லை என்பதை பொதுமக்களுக்கும், நம் தி. மு. கழகத் தோழர்கட்கும் அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

பொறுப்பாளர்,
"நம் நாடு,"
இராயபுரம், சென்னை-13.

"நம் நாடு" சந்தாதாரர்கட்கு

"நம் நாடு" சந்தாதாரர்கள் முகவரிக்கு மேலே சந்தா எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சந்தா முடிவடையும் தேதியும் முகவரிக்கு அடியில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

சந்தா முடிவடையும் தேதிக்கு சந்தா எண் குறிப்பிட்டு (முன்னர்) மணியார்டர் அனுப்பினால், முடிவடைந்த தேதியிலிருந்து புதுப்பித்துக்கொண்டு, "நம் நாடு" இதழ் அனுப்பிவைக்கின்றோம்.

சந்தா அனுப்பும் தோழர்கள், குறைந்தது மூன்று மாதங்கட்காகிலும் சந்தாத் தொகை அனுப்பினால், முகவரியை அச்சடித்துக்கொள்ள சௌகர்யமாயிருக்கும்.

1 மாத சந்தா மணியார்டர் அனுப்பி, அதையும், 2, 3 தடவை முகவரி மாற்றி, திருத்தம் எழுதிக்கொண்டிருந்தால் நிர்வாகத்திற்குத் தொல்லை தருவதாகும்.

"நம் நாடு" சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கலாம். "நம் நாடு" பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்புவதற்கில்லை. உள்நாடு, வெளிநாடு சந்தா விகிதத்தைப் பார்த்துக்கொண்டு, மணியார்டர் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

சந்தா கட்டணம்:

உள்நாடு:

ஆண்டுக் கட்டணம்	ரூ	24-0-0
ஆறு மாதம்		12-0-0
மூன்று மாதம்		6-0-0

வெளிநாடு

ஆண்டுக் கட்டணம்	ரூ.	30-0-0
ஆறு மாதம்		15-0-0
மூன்று மாதம்		7-8-0

தனிப்பட்ட நபர்கள் பெயருக்கு, மணியார்டர், டிராப்டு போஸ்டல் ஆர்டர் அனுப்பிவைக்காமல், பொறுப்பாளர், "நம் நாடு," இராயபுரம், சென்னை-13 முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்,
"நம் நாடு,"
இராயபுரம், சென்னை-13.

லண்டன், நவ. 7—

மெலிபோர்ன் கிரிக்கெட் கிளப் தலைவராக முன்பு இருந்த வில்லியம் பிண்ட்லே 28,000 பவுன் சொத்துக்கள் விட்டுவிட்டிருக்கிறார். சென்ற ஜூன் மாதம் இவர் காலமானார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.